# அறிக்கை

உடனடி வெளியீட்டுக்கு

**பிரதம மந்திரி கறுப்பு ஜூலையின் 41 ஆம் ஆண்டை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கை**

ஜூலை 23, 2024 ஒட்டாவா, ஒன்றாரியோ பிரதம மந்திரியின் அலுவலகம்

பிரதம மந்திரி ஜஸ்ரின் ட்ரூடோ, கறுப்பு ஜூலையின் 41 ஆவது ஆண்டை முன்னிட்டு பின்வரும் அறிக்கையை இன்று வெளியிட்டார்:

“நாற்பத்தொரு வருடங்களுக்கு முன்பு இதே நாளில் இலங்கையின் கொழும்பில் தமிழர்கள் மீதும், அவர்களது வணிக நிறுவனங்கள் மீதும் வன்முறைத் தாக்குதல்கள் ஆரம்பமாகின. ஆயிரக்கணக்கான அப்பாவிகள் மரணமாகி, மேலும் பெரும் எண்ணிக்கையானோர் காயமடைந்து, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, நாட்டை விட்டுத் தப்பியோடப் பலவந்தப்படுத்தப்பட்டார்கள். கறுப்பு ஜூலை என அறியப்படும் தமிழர்களுக்கு எதிரான இந்த வன்முறை, பதட்டத்தை அதிகரித்து, தசாப்த காலங்கள் நீடித்த ஆயுதப் போராகியது. இலங்கை வரலாற்றின் மிகவும் இருண்ட அத்தியாயங்களில் ஒன்றாக இது விளங்குகிறது.

“கனேடிய நாடாளுமன்றம் மே 18 ஆந் திகதியைத் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளாகப் பிரகடனம் செய்யும் பிரேரணையை 2022 ஆம் ஆண்டில் ஒருமனதாக அங்கீகரித்தது. அர்த்தமற்ற இந்த வன்முறைகளில் பாதிக்கப்பட்டோரையும், தப்பிப் பிழைத்தோரையும் நினைவுகூர்ந்து கௌரவிப்பதில் தமிழ்க் கனேடியர்களுடனும், உலகெங்கும் உள்ள தமிழ்ச் சமூகங்களுடனும் இணைந்திருப்பதில் கனடா கொண்டுள்ள உறுதிப்பாட்டை இது வெளிப்படுத்துகிறது. மனித உரிமைகளுக்கு உறுதியாகக் குரல்கொடுக்கும் கனேடிய அரசு, இலங்கையில் நலிவநடைந்த சமூகத்தினருக்கு எதிராகப் புரியப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கும், துஷ்பிரயோகத்திற்கும் பொறுப்புக் கூறலைத் தொடர்ந்து வலியுறுத்தும்.

“கறுப்பு ஜூலையின் பின்னணியில் 1,800 தமிழர்கள் பாதுகாப்பாகக் கனடாவுக்குக் குடிபெயர்ந்து அவர்களும், அவர்களது குடும்பங்களும் கனடாவில் புதிய வாழ்க்கையைக் கட்டியெழுப்புவதற்கு உதவியாகக் கனடா சிறப்பு ஏற்பாடுகள் செயற்திட்டம் ஒன்றைச் செயற்படுத்தியது. உலகின் மிகப் பெரும் புலம்பெயர் தமிழ்ச் சமூகங்களில் ஒன்று தற்போது கனடாவில் உள்ளது. தமிழ்க் கனேடியர்கள் ஒவ்வொரு நாளும் எமது நாட்டுக்குப் புரியும் பங்களிப்பைக் கொண்டாடும் நாம் அவர்களை எப்போதும் பாதுகாப்போம்.

“கறுப்பு ஜூலையில் துன்பத்தை அனுபவித்து, அன்புக்குரியவர்களை இழந்த அனைவருக்கும் கனேடியர்களுடன் இணைந்து எனது ஆழ்ந்த இரங்கலை இந்த நாளில் வெளியிடுகிறேன். இந்த அவலத்தில் பாதிக்கப்பட்டோரை நினைவேந்தி, வெறுப்பும் வன்முறையும் அற்றதும், அனைவரையும் அதிகம் உள்வாங்கியதும், அமைதியானதுமான எதிர்பாலத்தை அனைவருக்கும் கட்டியெழுப்புவதற்கான எமது உறுதிப்பாட்டை மீள உறுதிப்படுத்துவோம்.”

– 30 –